விலை: 30.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 135 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 20 செவ்வாய்க்கிழமை (03.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



## 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை

### தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை யாழில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
இந்திய அரசினால் உருவாக்கப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தினை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பா.ஜ.க. கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை யாழில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பா.ஜ.க. தமிழக தலைவர் அண்ணாமலை தமிழ் தேசிய கூட்டமைப்பினரை சந்தித்த பின் ஊடகங்களுக்கு ▷15

## அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

(கொழும்பு)
அரிசிக்கான உச்சபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் இந்த அறிவித்தல் வெளியிடப்படுள்ளது.

வெள்ளை - சிவப்பு நாடு அரிசி கிலோ ஒன்றின் விலை 220 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை - சிவப்பு சம்பா அரிசி கிலோ ஒன்றின் விலை 230 ரூபாயாக நிர்ணயிக்கப் ▷15

## பெற்றோல் கலன் தீப்பற்றியதில் 17 வயது மாணவி உயிரிழப்பு

### சுவாமி அறையில் விளக்கேற்றிய போது சண்டிலிப்பாயில் விபரீதம்


(அராலி)
வீட்டு சுவாமி அறையில் விளக்கேற்றிய போது பெற்றோல் கலன் தீப்பற்றி விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவி ஒருவர் தீயில் கருகி உயிரிழந்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரான்பற்றுப் பகுதியில் இத்துயரச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது

இதில்மகாஜனா கல்லூரி மாணவியான பண்டத்தரிப்பை சேர்ந்த சுதர்சன் - சுதர்சிகா (வயது-17) ▷15

## எந்த அரசியல்வாதிகளும் இனிமேல் என்னை சந்திக்க முடியாது

### ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர்



(கொழும்பு)
தம்மைச் சந்திப்பதற்கு எந்தவொரு அரசியல்வாதியையும் இனி அனுமதிக்கப்போவதில்லை என மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் வணக்கத் துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலை கிழக்கில் பாடசாலை அதிபர் சடலமாக மீட்பு



(சாவகச்சேரி)
மீசாலை கிழக்கில் பாடசாலை அதிபர் ஒருவர் நேற்று அதி காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


மீசாலை கிழக்கில் உள்ள அவரது வீட்டுக் காணிக்குள் தூக்கிட்ட நிலையில் ▷15

## சாவகச்சேரியில் விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் மத்தி பகுதியில் விபரீத முடிவெடுத்த இளைஞனொருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் நுணா ▷15

## அண்ணாமலையுடன் கூட்டமைப்பு சந்திப்பு



(யாழ்ப்பாணம்)
பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை நேற்று சந்தித்தார்.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் ▷15

## 6 ஆம் திகதி நாடு முற்றாக முடங்கும்

(கொழும்பு)
எதிர்வரும் 6ஆம் திகதி நாடு தழுவிய ஹர்த்தால் முன்னெடுக்கப்படும் என தொழிற் சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது. ▷15

## தேசிய அரசை அமைக்க கொள்கை ரீதியில் இணக்கம்

### மீண்டும் ஒன்றிணைந்த ஆளும்கட்சியினர்

(கொழும்பு)
ஆளும் கட்சியும் சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைப்பது என்ற பொது நிலைப்பாட்டுக்கு கொள்கை ரீதியில் வந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர்கள் இந்த நிலைப்பாட்டை எடுத்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார். ▷15

## மே தினம் கொண்டாட முடியாத நிலையில் தலைவர்கள் பங்கர்களில் பதுங்கிவிட்டனர்; கிரியெல்ல

(கொழும்பு)
69 இலட்ச வாக்குகளால் ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மே தினக் கூட்டத்தைக்கூட ஏற்பாடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவித்தார்.


தமக்கு தற்போதுள்ள மக்கள் ஆணையை கருத்திற்கொண்டு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உடனடியாக பதவி விலக ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொருளாதார நெருக்கடி அடுத்த மாதம் உக்கிரமடையும்

## ஐ.தே.க தலைவர் ரணில் எச்சரிக்கை



(கொழும்பு)

**தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியே நாட்டுக்கு பெரும் சவாலாகியுள்ளது. அடுத்த மாதம் ஆகுகையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி உக்கிரமடையும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இதன் ஆரம்ப புள்ளியாக பொருளாதார நெருக்கடியே உள்ளது.

இதன் தாக்கம் இன்று பெரும் எதிர்ப்பு அலையாக மாறி அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து நீக்கும் போராட்டமாகியுள்ளது.

அதேபோன்று இந்த எதிர்ப்பு அலையின் அடுத்த நிலையாக முழு அரசாங்கத்திற்கு எதிரானதாக உருவெடுத்துள்ளது.

இவ்வாறானதொரு அரசியல் - பொருளாதார நெருக்கடியை இலங்கை இதற்கு முன்பு எதிர்கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார். (ம)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை முகங்கொடுக்க அரசு தயார்

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகங்கொடுக்க தயார் என அரசாங்கத்தின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள அவர், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம்கொடுக்க ஆளும் தரப்பு தயாராக இருப்பதாகவும், ஆனால் எதிர்க்கட்சிகளுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதால் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் எதிர்க்கட்சிகளின் நம்பிக்கை நிறைவேறாது என நம்புவதாகவும் தெரிவித்தார்..

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாளை புதன்கிழமை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கோட்டா கோ கமவில் 24 மணி நேர மின் விநியோகம்

(கொழும்பு)

காலிமுகத்திடல் போராட்ட களத்துக்கு 24 மணிநேர நடமாடும் சூரிய மின் உற்பத்தி நிலையம் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லொறியில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின் நிலையத்தின் திறன் 6 கிலோ வோட் எனக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த நடமாடும் சூரிய சக்தி நிலைய வாகனம் பல நாட்களாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் போராட்டக் களத்தின் கூடாரங்களில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

### இலங்கைக்கு உதவும் வகையில்

# சர்வதேச நாணய நிதியத்தை ஊக்குவிக்கவுள்ளதாக சீனா உறுதி

(கொழும்பு)

இலங்கைக்கு உதவும் வகையிலான உடன்பாடு ஒன்றை விரைவாக எட்டுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தை ஊக்குவிக்கவுள்ளதாக சீனத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.



இலங்கைக்கான சீனத் தூதுவர் தன்னிடம் குறித்த விடயம் தொடர்பில் உறுதியளித்திருப்பதாக நிதி மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சீனக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் எச்.இ.ஜீ சென் அங் நேற்றைய தினம் நிதியமைச்சகத்தில் நிதியமைச்சர் அலி சப்ரியை சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய ஒத்துழைப்பின் பகுதிகள் மற்றும் தற்போதைய பொருளாதார பிரச்சினைகளை நிர்வகிப்பதற்கான வழிகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இலங்கைக்கு சீனாவின் முழு ஆதரவையும் தருவதாக தூதுவர் ஜீ சென் அங் மீண்டும் வலியுறுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய பங்குதாரர் என்ற வகையில், இலங்கையின் நிலைப்பாட்டை சாதகமாக பரிசீலித்து, கூடிய விரைவில் ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தை ஊக்குவிப்பதில் சீனா ஒரு செயலில் பங்கு வகிக்கத் தயாராக இருப்பதாகவும் சீனத் தூதுவர் அமைச்சர் அலி சப்ரிக்கு உறுதியளித்தார்.

சீனா மற்றும் இலங்கை ஆகிய இரு பிரதமர்களுக்கும் இடையில் அண்மையில் இடம் பெற்ற பயனுள்ள தொலைபேசி உரையாடல் குறித்து அவர் மேலும் தெரிவித்தார்.

இருதரப்புக் கடனை மறுசீரமைப்பது குறித்த கோரிக்கையைக் குறிப்பிடுகையில், முதிர்ச்சியடையும்கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தொடர்புடைய நிதி நிறுவனங்கள் மற்றும் துறைகளுடன் கலந்துரையாடல்களை சீனா தீவிரமாக ஆதரிக்கும் என்று சீனத் தூதுவர் தெரிவித்தார். (ம)

### மகிந்த பதவி விலகிய பின்

# பெரமுன உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் அமர தீர்மானம்

(கொழும்பு)

நாளை புதன்கிழமை மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலகியவுடன், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் அமரத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால அரசாங்கங்களிலோ அல்லது வேறு பெயரில் அமைக்கப்படும் அரசாங்கங்களிலோ அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதில்லை எனவும் அவர்கள் தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது.

இது தொடர்பில் கடந்த சில நாட்களாக பிரதமர் மகிந்த, பசில் மற்றும் நாமல் ஆகியோர் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த தீர்மானத்திற்கு கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் எதிர்க்கட்சியில் அமருவதே இந்த வேளையில் சிறந்த விடயம் என அவர்களில் பலர் பிரதமரிடம் சுட்டிக்காட்டினர்.

இதன்படி புதன்கிழமை ஆளும் கட்சி எதிர்க்கட்சியில் அமரவுள்ளதாக தெரியவருகிறது. (ம)


# கண்ணீர் அஞ்சலி



அமரர் துரைராஜா அருந்தவசீலன்

(அதிபர் - கிளி/கரியாலை நாகபடுவான் இல.2 அ.த.க பாடசாலை, பூநகரி)

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் கிளி/கரியாலை நாகபடுவான் இல.2 அ.த.க பாடசாலையின் அதிபர் அமரர் துரைராஜா அருந்தவசீலன் அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்.

(C-4275)



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603,

021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பதாகைகளை அகற்ற முயன்ற பொலிஸார் முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள்

## கோட்டாகமவில் பதற்றம்

(கொழும்பு)

**ஜனாதிபதி அலுவலகத்திற்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள கோட்டாகோகம பதாகைகளை அகற்றுவதற்கு பொலிஸ் அதிகாரிகள் முற்பட்டதால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.**





பொலிஸாரின் முயற்சியால் கோபமடைந்த போராட்டக்காரர்கள். பொலிஸாரின் வாகனத்தை முற்றுகையிட்டு அவர்களை வெளியேறுமாறு தெரிவித்தனர்.

ஜனாதிபதிசெயலக நுழைவாயிலில் ஒரு மேடையை அமைப்பதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சித்ததாக உயர் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதைத் தவிர்க்குமாறு போராட்டக்காரர்கள் வலியுறுத்தப்பட்ட நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கலகத் தடுப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இருப்பினும் நேற்று 24 ஆவது நாளாகவும் காலிமுகத் திடலில் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நல்லூர்க் கந்தனை தரிசித்தார் பா.ஜ.க.தமிழகத் தலைவர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவரான அண்ணாமலை நேற்று நல்லூர் ஆலயத்திற்குச் சென்று நல்லூர்க்கந்தனை வழிபட்டார்.

யாழில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் அவரை வரவேற்று ஆலய வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றனர். (நி-6-33)






பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு. தமிழீழ மக்கள் பேரவை. தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் 2022 மே 1 தொழிலாளர் நாள் பேரணி நேற்று முன்தினம் பல்லின மக்களின் பிரமாண்ட பேரணியோடு எழுச்சியாக பிரான்ஸில் இடம் பெற்றது.


# அமரர்.சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜ குருக்களின்

(கண்ணன் ஐயா)

# ஓராண்டு நினைவுகூரல்

(03.05.2022)



எங்கோ பிறந்தோம் எங்கோ வாழ்ந்தோம் இடையில் ஒன்றுகூடினோம் பாதியில் பிரிந்து விட்டோம் இதுதான் வாழ்க்கையில் நிஜம் கூடுவதும் பிரிவதும் தான் உண்மையான வாழ்க்கை என இவளவு காலமும் அறியாது வாழ்ந்து விட்டோம். திடீர் இழப்புக்கள் எங்களுக்கு வாழ்க்கையின் பாடங்களாகிவிட்டன. வாழ்க அந்தணர் என சம்பந்தர் போற்றிய அந்தண குலத்துதித்து செம்மல் கண்ணன் ஐயா "குரூர்பிரமம்" என்ற வேத வாக்கியத்திற்கு கட்டுப்பட்டு குருமார்களை தெய்வஸ்தானத்தில் வைத்து போற்றியவர். ஆனால் தன் குலங்கடந்தும் குருமார்களை கடவுளாக எண்ணியவர் அப்படியொரு நல்ல சிஷ்யனை இழந்து தவிக்கின்றோம். என்னை குரு என்பதற்குமப்பால் குடும்பத்தில் ஒருவராக எண்ணி என் குடும்பத்தில் ஆழ்ந்த பற்று கொண்டு வாழ்ந்தவர். அந்த வகையில் என் பிள்ளைகள் 'சோமையா மாமா ' என்று செல்லமாக அழைக்கும் பாக்கியத்தை இழந்து விட்டனர். நான் எனக்கு ஆறுதலளிக்கும் அன்புள்ளத்தை இழந்து விட்டேன். இழப்புக்கள் படிப்பினையை தரும் .இது தான் வாழ்வின் நியதி என்ற உண்மையை உணர வைக்கும் .அந்த வகையில் அன்னாரின் இழப்பு அவர் குடும்பத்திற்கு மட்டுமல்ல அவருடன் உறுகொண்ட அனைவருக்கும் பேரிழப்பாகும். 'நம் கையில் எது உண்டு ' எல்லாம் அவன் கையில் எது எப்போ எப்படி நடக்கப்போகுது என்று தீர்மானிக்கும் அதிகாரம் எம்மிடம் இல்லை. இவ்வுலகில் செம்மையாக வாழ்ந்த அவர் மறுமை வாழ்விலும் செம்மையாக வாழ ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல அம்பாளை அடிபணிந்து நிற்கும்.

(சி-4273)

அன்னாரது குடும்ப உறவில் ஒருவராக எண்ணும் S.அருள்நங்கை (விரிவுரையாளர் புதிய உயர் கல்லூரி) யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான கால்பந்தாட்ட இறுதிப்போட்டியில்

# சென்தோமஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியன்



பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களிற்கான கால்பந்தாட்ட தொடரில் பருத்தித்துறை சென்தோமஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென் தோமஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதியது.

இதில் பருத்தித்துறை சென்தோமஸ் அணி வீராங்கனை றொசானா மிகச் சிறப்பான கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் பருத்தித்துறை சென்தோமஸ் அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் மிகச் சிறப்பான பந்துப் பரிமாற்றத்தை மேற்கொண்டனர்.

இருப்பினும் பருத்தித்துறை சென்தோமஸ் அணி வீராங்கனை தயாளினி ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் பருத்தித்துறை சென்தோமஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீக ரித்துக் கொண்டது. (6-90)




இலங்கை பூப்பந்தாட்ட சம்மேளனம் நடத்திய இவ்வாண்டுக்கான தேசிய ரீதியான 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இப்போட்டியில் வடமாகாணம் சார்பில் சற்குணம் காண்டீபன் மேல் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவரை எதிர்த்து விளையாடி சம்பியன் பட்டத்தை தனதாக்கினார்.

வடமாகாணத்திற்கு 43 வருடங்களின் பின் கிடைத்த சம்பியன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

(படம்- சிவசாந்தன்,ரவிசாந்)

# பருத்தித்துறை கால்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டமும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் நடத்தும் தமது அங்கத்துவ கழகங்களுக்கிடையி லான கால்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதன் இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து வல்லை ஆதிசக்தி விளை யாட்டுக் கழக அணி மோத வுள்ளது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவர் இ.பரமதாஸ் தலைமையில் நடைபெறும். (6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2608

**ஜிரோனி**




**யஸ்வந்**




**நிதர்சன்**




**யாதேஷ்**




**மாதுரி**




**வதனி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுக்கான கடனுதவியில் இரும்பு இறக்குமதியா?

## பொருளாதார நிபுணர்கள் கேள்வி

(கொழும்பு)

**இலங்கைக்கு உணவு உட்பட அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்ய இந்தியா வழங்கிய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை பயன்படுத்தி, இரும்பை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

இந்தியா வழங்கிய இந்த கடனுதவியில் ஏற்கனவே 250 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள 750 மில்லியன் டொலர்களில் இரும்பு மற்றும் உருக்கு ஆகியவற்றை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், சமையல் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்டவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலையில், இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதி செய்யப்படுகின்றமை தொடர்பில் பொருளாதார நிபுணர்கள் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

இரும்பு மற்றும் உருக்கை இறக்குமதி செய்வதற்காக வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஏற்கனவே இந்திய வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (நி)


# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 01.08.1949 உதிர்வு 15.04.2021

காங்கேசன்துறை பதி
அமரர்.

**புஸ்பரஜனி சிவஞானம்**

(புஸ்பாஞ்சலி)

திதி- சித்திரை மீ.வளர்பிறை திருதிகை
(03.05.2022)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்மை
உயர்வாய் வாழவைத்த எங்கள் அம்மாவே!
எத்தனை உறவுகள் இருந்தாலும் அவை
உங்கள் இடத்தினை நிரப்புமா???
ஓர் ஆண்டு ஆனாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அகலவே அகலாது!
உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
கணவர்,பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் சுற்றத்தார்.

146/3, கே.கே.எஸ் வீதி,
குளப்பிட்டி சந்தி, கொக்குவில்
077 896 9787/ 077 741 0854 (9590)

47/1 சஞ்சி ஆராய்ச்சி கார்டன்,
கொழும்பு-12
077 741 0855
+1-416-5871213


# போராட்டங்கள் நெருக்கடி நிலையை மேலும் மோசமாக்கும்- பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

போராட்டங்களால் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைக்காது. அது பொருளாதார நெருக்கடியை மேலும் மோசமாக்கும் என சுற்றுலா மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



இந்த நிலைமையை அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவிக்கையில், "நாட்டின் அரசாங்கத்தை மாற்றும் செயற்பாடுகள் அரசியலமைப்பின் பிரகாரம் இடம்பெற வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண உண்மையான விருப்பம் இருந்தால், நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழிகள்ளைத் தடுக்கும் வகையில் போராட்டக்காரர்கள் செயற்படக் கூடாது.

எனவே, போராட்டக்காரர்கள் யதார்த்தமாகச் சிந்தித்து தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

03.05.2022
சித்திரை 20, செவ்வாய்க்கிழமை
திருதியை முழுவதும்
ரோகினி பின்னிரவு 2.42 மணிவரை

சுபநேரம்-10.26-11.56 மணிவரை
இராகு காலம்- 2.56-4.26 மணிவரை
ரமழான் பண்டிகை, அட்ஷயதிருதியை
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்- சுவாதி

**வளவன்**

**மேஷம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**ரிஷபம்:** எந்தவொரு வேலையையும் உடன் செய்து முடிக்கும் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** ஊர் மாற்றம், இட மாற்றம் என்பன இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கடகம்:** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும், பணி புரியும் நாள், வருமானம் பெருகி வளம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிந்து புகழ் பெறுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது, மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டில் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** செய் தொழிலில் மேன்மையும், உயர்வும் கிட்டும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**மீனம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

உடன் உதவுதலே உதவி, தாமதித்த உதவி உதவியன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் பிரதமராக வந்தாலும் மாற்றம் ஏற்படாது

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற நிலையில் யார் புதிய பிரதமராக வந்தாலும் நாட்டில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப் போவதில்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம்.பி .தெரிவித்தார்**

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். யார் பிரதமராக வந்தால் நாட்டில் மாற்றம் ஏற்படலாம் என நீங்கள் கருதுகிறீர்கள் என ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற நிலை காணப்படுகின்றது. பிரதமரை மாற்ற வேண்டும் என்று ஒரு குழு விடாப்பிடியாக நிற்கின்றது. எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக்கொண்டு வந்து நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி முறையினை ஒழிப்பதன் மூலமே நாட்டில் மாற்றம் ஏற்படும்.

இந்த நாட்டில் எவர் பிரதமர் பதவிக்கு வந்தாலும் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை. அத்தோடு நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். எனினும் அந்த விடயம் தொடர்பில் நாங்கள் அனைத்துக்கட்சிகளுடனும் ஆராய்ந்து முதல்



கட்டமாக ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வருவதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-6-33-104-101)

## சங்கிலி திருட்டு சந்தேகநபர் கைது


(சாவகச்சேரி)

கொடிகாமம் - வெள்ளாம் போக் கட்டி பகுதியில் மோட்டார் சைக் கிளில் சென்று சங்கிலி அறுத்த் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நெல்லியடிப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளாம் போக்கட்டிப் பகுதியில் கணவனுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணின் ஒன்றரைப் பவுண் சங்கிலியை இரவல் மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்ற இருவர் அறுத்துக் கொண்டு தப்பித்துச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் கொடிகாமப் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஏற்கனவே மோட்டார் சைக்கிள் உரிமையாளர் கைதான நிலையில் தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் ஒருவரும் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கைதான நபர் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-6-30)

## கலாசார மண்டபத்தை பார்வையிட்டார் பா.ஜ.க.தமிழக தலைவர் அண்ணாமலை



(யாழ்ப்பாணம்)

பா.ஜ.கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை யாழ்ப் பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் மேற் கொண்டார். நேற்றுக் காலை யாழ்ப் பாணத்திற்கு வருகை தந்த பா.ஜ.கட்சியின் தமிழ் நாட்டுத்தலைவர் அண்ணாமலை இந்திய அரசின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் அமைக்கப் பட்டு வரும் இந்திய கலாசாரம் மத்திய நிலையத்தினை பார்வையிட்டதோடு நல்லை ஆதீன குரு முதல்வரையும் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது யாழ். இந்தியத் துணைத் துாது வர் ராகேஷ்நடராஜ் இலங்கை தொழிலாளர் காங் கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோரும் கலந்து கொண்டனர். (நி-6-18-33-104)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டறிக் கழத்தினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதி யைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு வாழ்வாதார உதவியாக கோழிகள் மற்றும் கோழிக் கூடு ஆகியன கையளிக்கப்பட்டது. (படம் - [illegible])


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 17 சூரி 10 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: A/L, கிராம உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12559 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 66 சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்: மின் பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/9487 |
| பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம் : மகம் 3<br>கி.பா: 49 சூரி 7 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: BSc (Hons) in Chemical and Process Engineer MBA<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி தனியார் அரச உத்தியோகம்<br>தொ.இ: B/12560 | பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 72 சூரி, செவ் 7 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/9488 |
| பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 16 சூரி 4 செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: LLB (Hons) Executive, ITN<br>எதிர்பார்ப்பு: தகுந்த தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12561 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>கி.பா: 41 சூரி 10 செவ் 6 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc in Food Science & Technology Reading MSc Lecturer –அரச<br>எதிர்பார்ப்பு : விரிவுரையாளர்<br>தொ.இ:G/9499 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: சூரி, செவ் 4 இல் , உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச தனியார் அரச உத்தியோகம்<br>தொ.இ: B/12566 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 3<br>கி.பா: 11 ½ சூரி 3 செவ் 11 உயரம் : 5'4"<br>தகைமை/தொழில் : B.Sc in Radio Graphy<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/9516 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா :500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அரசியலமைப்பை தீயிட்டு கொளுத்துவோம்

## பாகொட ஜன்தவங்ஷ தேரர் சீற்றம்

(கொழும்பு)

**நாட்டு மக்கள் பாரிய நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ள போது அரசியல்வாதிகள் அரசியலமைப்பின் ஊடாக அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முயற்சிப்பார்களாயின் அவர்களும் பிரயோசனமற்றவர்களாகி , அரசியலமைப்பும் பிரயோசனமற்றதாகிவிடும்.**

எனவே இதே நிலைமை தொடருமாயின் நாட்டில் ஒவ்வொரு சந்தியிலும் அரசியலமைப்பை தீயிட்டு கொளுத்துவோம் என பாகொட ஜன்தவங்ஷ தேரர் தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் அரசியல் கட்சி தலைவர்களுக்கும், மகாசங்கத்தினருக்குமிடையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், தேசிய கீதம் இசைக்கப்படும் போது மரியாதை செலுத்தி எழுந்து நிற்கிறோம். மயக்கமடைந்து விழுந்த பிறகு மரியாதை செலுத்த முடியாத நிலைமை ஏற்படும். நாடு பல் துறைகளில் வீழ்ச்சியடைந்துள்ளது.

மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இல்லாமல் பொது மக்கள் உயிரிழக்கும் நிலைமை ஏற்படும் போது அரசியலமைப்பின் அடிப்படையில் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு மக்கள் இறந்தாலும் பரவாயில்லை என மக்கள் பிரதிநிதிகள் கருதுவார்களாயின், மக்கள் பிரதிநிதிகளும் அவசியமில்லை, அரசியலமைப்பும் அவசியமில்லை.

அரசியல்வாதிகள் அரசியமைப்பில் இருந்துகொண்டு தங்களை பாதுகாத்துக்கொள்ள முயற்சிப்பார்களாயின் அரசியலமைப்பை நாட்டில் ஒவ்வொரு சந்தியிலும் தீயிட்டு கொளுத்துவோம். மக்களின் நலனுக்காகவே அனைத்தும் உள்ளன.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் வழங்கியுள்ள ஆலோசனைகளுக்கு பிரதமர் உட்பட முழு அரசாங்கமும் மதிப்பளிக்க வேண்டும். அத்துடன் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல கட்சிளும் இடைக்கால அரசாங்கம் குறித்து அவதானம் செலுத்த வேண்டும்.

பொதுத்தேர்தல் ஊடாகவே பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என ஒரு சில அரசியல் கட்சிகள் முன்வைத்துள்ள யோசனை ஏற்றுக்கொள்ள கூடியது. பொதுத்தேர்தலை நடத்தும் சூழல் நாட்டில் தற்போது கிடையாது.


இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக பொதுத்தேர் தல் ஒன்றை நடத்தும் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

## வித்தியாசமான காட்சிப்படுத்தலுடன் வடை வியாபாரம்

(ஹற்றன்)

நுவரெலியா நகரில் பேருந்து நிலையத்திற்கு அருகில் வடை விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர், வடைகளின் விலைகளை காட்சிப்படுத்தாது, வடையை தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் விலைகளை காட்சிப்படுத்தி வியாபாரத்தை மேற்கொண்டு வருகிறார்.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் பொருட்களின் விலைகள் காரணமாக வடையின் விலையும் அதிகரித்துள்ளதாகவும் விலை அதிகரிப்பு குறித்து நுகர்வோர் விசாரிப்பதால், வடையை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலைகளை காட்சிப்படுத்தியுள்ளதாகவும் அந்த வடை வியாபாரி தெரிவித்தார். (நி)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மரியுபோலில் தஞ்சமடைந்தவர்கள் மீட்பு



(கீவ்)

ஒரு வழியாக உக்ரைனின் மரியுபோல் நகரில் அமைந்துள்ள உருக்காலையில் தஞ்சம் புகுந்திருந்த உக்ரைனியர்களை வெளியேற்றும் பணி ஆரம்பித்துள்ளதாக உக்ரைன் ஜனாதிபதியான வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

மரியுபோல் நகரிலுள்ள Azovstal உருக்காலை ரஷ்யப் படையினரால் ஏப்ரல் 16 ஆம் திகதி முற்றுகையிடப்பட்டது. ஆனாலும், உண்மையில் இரண்டு மாதங்களாகவே சுமார் 2,000 பேர் அங்கு தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

அவர்களில் சுமார் 1,000 பேர் பொதுமக்கள் என்றும், மீதமுள்ளவர்கள் உக்ரைன் இராணுவ வீரர்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் அமைப்பும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், உக்ரைன் மற்றும் ரஷ்ய அதிகாரிகளுடைய ஒத்துழைப்புடன் இந்த மீட்புப் பணியைத் தொடங்கியுள்ளன.

ஆனால் மீட்கப்பட்டுள்ளவர்கள் ரஷ்ய ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கிழக்கு உக்ரைனிலுள்ள Bezimenne என்னும் கிராமத்துக்குத்தான் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

அங்கு தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அவர்கள், பிறகு எங்கு கொண்டு செல்லப்படுவார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆக, அவர்கள் ரஷ்ய தொழிலாளர் முகாம்களைச் சென்றடையும் ஒரு பரிதாப நிலை உருவாகிவிடுமோ என்ற அச்சம் உருவாகியுள்ளது. (நி)



## உக்ரை...

## புடின் அ...

## அ...

(வோஷிங்டன்) — ரஷ்ய ஜனாதிபதி... பயன்படுத்துவார் என...

தனியார் ஊடகம் ஒன்றுடனான நேர்காணலில் பேசிய செனட்டர் வெளியுறவுத்துறை சபைத் தலைவர் பாப் மெனெண்டஸ் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

உக்ரைன் இராணுவத்தின் தொடர்...

## ஏலத்திற்கு வரும்

## உலகின் மிகப்பெரிய விஸ்கி போத்தல்



(லண்டன்)

உலகின் மிகப்பெரிய விஸ்கி போத்தல் இந்த மாதம் 25 ஆம் திகதி ஏலத்திற்கு வருகிறது. மெக்கலன் நிறுவனத்தின் ஸ்காட்ச் விஸ்கி ரகத்தைச் சேர்ந்த இந்த போத்தல் 5 அடி, 11 இன்ச் அளவையும், 311 லீற்றர் கொள்ளளவை கொண்டுள்ளது.

இந்த விஸ்கிக்கு 'திஇண்ட்ரிபிட்' என பெயரிடப்பட்டுள்ளது. எய்டன்பெர்க்கில் உள்ள ல்யான் அண்டார்பிள் என்ற ஏல விடுதியில் இந்த போத்தல் ஏலத்திற்கு வருகிறது. இது 444 சாதாரண விஸ்கி போத்தல்களுக்கு ஒப்பான மதுவை கொண்டுள்ளது.

கடந்த வருடம் கின்னஸ் உலக சாதனை பட்டியலிலும் இந்த விஸ்கி போத்தல் இடம்பிடித்தது. இது விற்கப்பட்டவுடன் இதன் 25 சதவீத தொகை மேரி கியூரி மருத்துவ தொண்டு நிறுவனத்திற்கு வழங்கப்படும் என வேல்ஸ் ஒன்லைன் என்ற இணையத்தளம் தெரிவித்துள்ளது. (நி)

## ஜேர்மனியில் பிரதமர்

## உற்சாக வரவே...



(பெர்லின்)

ஐரோப்பிய பயணத்தின் முதல் கட்டமாக நேற்று முன்தினம் ஜேர்மனி சென்றடைந்த பிரதமர்

## இணையவழி தாக்குதல்கள் இந்தியாவில் அதிகம்

### ஆய்வில் தகவல்

(டில்லி)

கல்வி நிறுவனங்கள் மீதான இணையவழி தாக்குதல்கள் இந்தியாவில் அதிகம் நடந்துள்ளதாக ஆய்வொன்று தெரிவித்துள்ளது.

ஆசியு நாடான சிங்கப்பூரைச்சேர்ந்த சைபர்பாதுகாப்பு நிர்வாக அமைப்பு ஒன்று, கல்வி நிறுவனங்கள் மீதான சைபர் தாக்குதல் தொடர்பாக சமீபத்தில் ஆய்வு நடத்தியது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், "கடந்த ஆண்டில் பதிவான இணைய வழி தாக்குதல்களில் இந்தியாவில் தான் மிகவும் அதிகமான இணைய வழி தாக்குதல்கள் நடந்துள்ளன.

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தோனேஷியா, பிரேசில், ஆகிய நாடுகள் அதற்கு அடுத்த இடங்களில் உள்ளன. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் நடந்த தாக்குதல்களில் 58 சதவீதம் இந்திய நிறுவனங்கள் மீதே நடந்துள்ளன. அதற்கு அடுத்து இந்தோனேஷியாவில் 10 சதவீதம் நடந்துள்ளன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## பிலிப்பைன்ஸில் தீ விபத்து

## 6 குழந்தைகள் உட்பட 8 பேர் பலி



(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா விற்கு அருகில் குடியிருப்புகளில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 குழந்தைகள் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை மாலை நடைபெற்ற இந்த தீ விபத்தில், 80 வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

தீயை அணைக்க கிட்டத்தட்ட இரண்டு மணி நேரமாகியதாக தீயணைப்பு அதிகாரி கிரெக் பிச்சாய்டா தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் உலகின் மிக அதிக சனத் தொகை கொண்ட நாடுகளில் ஒன்றாகும். மேலும் அதன் தலைநகரில் ஒரு சதுர கிலோமீற்றருக்கு அதிக எண்ணிக்கையிலான குடியிருப்பாளர்கள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ரெனின் தொடர் வெற்றியால் அணு ஆயுதங்களை பயன்படுத்தலாம்

## மெரிக்கா அச்சம்

**தி புடின் உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களை**
**ன அமெரிக்க செனட்டர் கவலை தெரிவித்துள்ளார்.**

வெற்றி காரணமாக ஜனாதிபதி புடின் அணு ஆயுதங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

அவர் தனது மரியாதையை காப்பாற்ற அணு ஆயுதங்களை பயன்படுத்துவார் என நான் அஞ்சுகிறேன்.

உக்ரைனியர்கள் பெறும் வெற்றியை விட, புடின் தோற்பதால், சொந்த நாட்டில் தனது பெயரை காப்பாற்றிக்கொள்ள, அவர் ஏதேனும் விபரீத முடிவு எடுப்பதற்கான ஆபத்து அதிகம் என்பதே எனது முக்கிய கவலைகளில் ஒன்று.

எனவே அதன் விளைவாக இரசாயன, உயிரியல் அல்லது அணு




ஆயுத தாக்குதலுக்கான வாய்ப்பு அதிகரிக்கூடும் என பாப் மெனெண்டஸ் எச்சரித்துள்ளார். (நி)


## ர் மோடிக்கு வேற்பு

நரேந்திர மோடிக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

3 நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி, டென்மார்க், பிரான்ஸ் ஆகியவற்றுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். (நி)



## மலைப்பாம்புகளுடன் நடனமாடி வியக்க வைத்த வாலிபர்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவில் வாலிபர் ஒருவர் 2 மிகப் பெரிய மலைப் பாம்புகளை தனது தோளில் போட்டுக் கொண்டு நடன மாடியுள்ளார். மலைப்பாம்புகள் விஷம் இல்லாதவை. ஆனால் ஆட்களையே விழுங்கி விடும் அபாயம் நிறைந்தவை. எனவே மிகப் பெரிய மலைப்பாம்பு அருகில் கவனமுடன் செல்ல வேண்டும் என்று எச்சரிக்கப்படுவதுண்டு.

ஆனால் அந்த பயம் இல்லாமல் இந்தோனேசியாவில் வாலிபர் ஒருவர் 2 மிகப்பெரிய மலைப் பாம்புகளை தனது தோளில் போட்டுக்கொண்டு நடன மாடியுள்ளார். அவரது இந்த நடனக்காட்சி வீடியோவில் பதிவாக சமூக வலை தளங்களில் வைரலாகியுள்ளது. (நி)

## ஈரானில் ஆறு ஏவுகணை தாக்குதல்கள்



(டெஹ்ரான்)

ஈரானிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகில் ஏவுகணை தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குர்திஷ் கிளர்ச்சியாளர்களினாலேயே குறித்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈரானிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இலக்கு வைத்தே ஆறு ஏவுகணை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பில் ஏற்பட்ட உயிரிழப்பு அல்லது சேதம் தொடர்பில் இதுவரை தகவல் வெளியிடப்படவில்லை. (நி)

## சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் எல்லைகளை திறந்தது நியூஸிலாந்து

(வெலிங்டன்)

இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொற்றுநோய்க்கு பின்னர், சுற்றுலாப் பயணிகளுக்கு மீண்டும் எல்லைகளை நியூஸிலாந்து திறந்துள்ளது.

அதிகமான சர்வதேச பார்வையாளர்களுக்கு மீண்டும் நேற்று திங்கட்கிழமை எல்லைகளை திறந்துள்ளது.

நாட்டின் ஒக்லாந்து விமான நிலையத்தில் பயணிகள், குடும்பம் மற்றும் நண்பர்களுடன் உணர்வு பூர்வமாக மீண்டும் இணைந்தனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் எல்லையை மீண்டும் திறப்பதாக அறிவித்த பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன்,




தென் பசுபிக் நாடு 'உலகைத் திரும்ப வரவேற்கத் தயாராக உள்ளது' என தெரிவித்தார்.

தடுப்பூசி மற்றும் எதிர்மறை கொவிட் சான்றிதழ்-ஸ்ரீ இருந்தால், 60 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் இப்போது நாட்டிற்குள் நுழைய முடியும்.

நியூஸிலாந்தின் பொருளாதாரம் சர்வதேச பார்வையாளர்களிடமிருந்து சுற்றுலாவை பெரிதும் நம்பியுள்ளது, மேலும் செயற்பாட்டை மீண்டும் தொடங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக கட்டுப்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் பொருளாதார நெருக்கடியால் இந்தியாவில் தஞ்சமடையும் மக்கள்



(முறிகண்டி)

இரண்டு மாதக் குழந்தையுடன் ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் கடல் வழியாக தமிழகத்தை சென்றடைந்தனர். வவுனியாவைச் சேர்ந்த இவர்கள் நேற்று முன் தினம் நெடுந்தீவில் இருந்து படகொன்றின் மூலம் தமிழகம் சென்றனர்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் இன்று வரை 80 இலங்கையர்கள் இந்தியா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-100-250-299)

# மல்லாவி திருநகரில் இனந்தெரியாத நபர்களால் மோட்டார் சைக்கிள் தீக்கிரை



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சனநடமாட்டமற்ற பகுதியில் நேற்று முன் தினம் இரவு 10.30 மணி அளவில் மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எரியூட்டப்பட்ட மோட்டார் சைக்கிள் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. குறித்த சம்பவம் இடம்பெற்ற இடத்தில் தலைக்கவசம் மற்றும் பாதணிகள் என்பனவும் காணப்பட்டன.

இச் சம்பவம் தொடர்பில் மல்லாவிப் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (நி-6-315)

# போராட்டம் நடைபெறாவிட்டால் ராஜபக்ஷக்களின் ஆணவ ஆட்சி தொடரும்

## பேராசிரியர் லக்ஸ்மன் பியதாச

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக பொது மக்கள் போராட்டத்தை முன்னெடுக்காவிட்டால் அரசாங்கத்தின் ஆணவ ஆட்சி தொடரும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான பேராசிரியர் ரோகன லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

பல நபர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளால் நாடு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர், முன்னாள் நிதி, விவசாயம் மற்றும் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து நபர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் 75 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நபர்களின் நிதி முறைகேடு நாட்டை அழிவுக்கு இட்டுச் சென்றுள்ளது.

அதனால் ஜனாதிபதி, அமைச்சரவை, அரசாங்கம் மற்றும் பாராளுமன்றத்திற்கு எதிராக இளைஞர்கள் வீதியில் இறங்கியதாக அவர் குறிப்பிட்டார். (நி)

# எல்லை மீறிய குற்றச்சாட்டில் 6 இலங்கை மீனவர்கள் கைது

(சென்னை)

கடல் எல்லையை மீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 6 பேர் தமிழகத்தில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாகை மாவட்டம் கொடியகரை அருகே இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 6 பேரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இவர் காரைக்கால் தனியார் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

# எரிபொருள் தரம் தொடர்பாக அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

(கொழும்பு)

எரிபொருள் தரம் குறித்து ஏதேனும் சந்தேகம் காணப்படுமாயின் அது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிப்பதற்காக இரு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி விடயம் தொடர்பாக 011 523 4234 மற்றும் 011 545 5130 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 320 | 330 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 250 | 300 |
| தக்காளி | 380 | 300 | 280 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 120 | 100 |
| கோவா | 100 | 140 | 140 | 160 |
| கரட் | 180 | 160 | 180 | 200 |
| பூசணி | 80 | 70 | 70 | 80 |
| புடோல் | 180 | 150 | 180 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 300 | 160 | 100-350 | 280 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 500 | 450 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 180 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 170 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 320 | 220 | 150 |
| லீக்ஸ் | 150 | 180 | 150 | 150 |
| பீற்றூட் | 160 | 200 | — | 240 |
| கறிமிளகாய் | 250 | 300 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 500 | 1000 |
| போஞ்சி | 380 | 450 | — | 520 |
| கத்தரிதம்புள்ள | 340 | 250 | — | 340 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 120 | 140 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 50-80 | 50-80 |
| இராசவள்ளி | 180 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 120 | — | 240 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — |

# நெல்லியடியில் கடை உடைத்து 1 1/2 இலட்சம் ரூபாய் பணம் திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு சென்ற வர்த்தகர் நேற்று திங்கட்கிழமை காலை வர்த்தக நிலையத்தினை திறந்த போது பின் பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது.

அதன்பின் கடையில் இருந்த ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டது தெரியவந்தது.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-6-60)



விதையனைத்தும் விருட்சமே இளைஞரணி மற்றும் இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் நடத்திய மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்:- ரவிசாந்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய கண்டனத்தை பெற்ற முதலாவது அரசாங்கம் இதுவே

## பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ

**(கொழும்பு)**

**நாட்டின் வரலாற்றில் பாரியளவிலான மக்களின் கண்டனத்தைப் பெற்ற முதலாவது அரசாங்கம் இதுவே என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**



மே தின பேரணியில் கலந்துகொண்டு பேசிய அவர், புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு சஜித் பிரேமதாசவிற்கு பெரும்பான்மையான மக்களின் ஆதரவு இருப்பதாக தெரிவித்தார்.

ஜனாதிபதியை பதவி விலகுமாறு மக்கள் தொடர்ச்சியாக கோஷமிட்டு வரும் நிலையில் எதிர் வரும் சில வாரங்களில் போராட்டங்கள் பலனளிக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## சிறுவர்களிடையே வைரஸ் தொற்று அதிகரிப்பு

(கொழும்பு)


நாட்டில் கடந்த சில நாட்களாக சிறுவர்கள் மத்தியில் வைரஸ் தொற்று அதிகரித்துள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது. காய்ச்சல், சளி, இருமல், நிமோனியா போன்ற நோய்களின் பாதிப்பு அதிகரித்துள்ளது.

இந்தப் பாதிப்பு உள்ள சிறுவர்களுக்கு மூச்சு விடுவதற்கு சிரமம் அதிகரித்துள்ளதாகவும் அவ்வாறான பாதிப்பு ஏற்படும் சிறுவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவர் திபால் பெரேரா பெற்றோர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)

## வலையில் சிக்கிய 800 கிலோ சுறா மீனவருக்கு அடித்த அதிர்ஷ்டம்

(கொழும்பு)

வெலிகம, மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகத்தில் பாரிய சுறா ஒன்று 176,000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



கடற்கரையில் இருந்து இருபத்தைந்து கடல் மைல் தொலைவில் மீன்பிடி வலையில் சுமார் 800 கிலோ எடையுள்ள சுறா சிக்கியது. பின்னர் அதனை கப்பலுக்குள் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் அது எளிதான காரியமாக இருக்கவில்லை.

அதன் பின்னர் 15 மணித்தியாலங்களுக்கு மேலாக குறித்த சுறாவை இழுத்துச் சென்ற மீனவர்கள் குழுவினர் நேற்று முன்தினம் காலை மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகத்தில் அதனை பிடிக்க முற்பட்டுள்ளனர்.

அந்த வாய்ப்பு கூட அவ்வளவு எளிதாக அமையவில்லை.

பின்னர் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் அதை மேலே தூக்கி கரைக்கு கொண்டு வரப்பட்டு ஒரு இலட்சத்து எழுபத்தாறாயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. (நி)

## சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை சுமார் 50% குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் 60,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர் என்றும் எனினும் மார்ச் மாதம் கிட்டத்தட்ட 110,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு, மருந்துகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு போன்றவை சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவதற்கு காரணமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## முகநூல் தரிசனம் 35

### நாம் எதை நம்புகிறோமோ அதுவாக மாறுவோம்

ஒருமுறை, ஒரு யாசகன் ரயிலில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் வேளை ஒரு தொழிலதிபர் நன்றாக உடையணிந்திருப்பதைக் கவனித்தான். இந்த மனிதன் பெரிய பணக்காரனாக இருக்க வேண்டும், நான் அவரிடம் கேட்டால் அவர் நிச்சயமாக பணம் தருவார் என்று அவன் நினைத்தான். எனவே அவன் சென்று அந்த மனிதரிடம் பிச்சை கேட்டான்.

அந்த மனிதர் யாசகனைப் பார்த்து, "நீங்கள் எப்பொழுதும் பிச்சையெடுத்துக் கொண்டே இருப்பீர்கள், எவருக்கும் ஏதாவது கொடுக்கிறீர்களா?"

யாசகன், "ஐயா, நான் ஒரு யாசகன், நான் மக்களிடம் பணம் மட்டுமே கேட்க முடியும், நான் எப்படி யாருக்கும் எதையும் கொடுக்க முடியும்?"

அந்த மனிதர் பதிலளித்தார், "நீங்கள் யாருக்கும் எதையும் கொடுக்க முடியாதபோது, அப்படிக் கேட்க உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. நான் ஒரு தொழிலதிபர். மற்றும் பரிவர்த்தனைகளை மட்டுமே நம்புகிறேன் - என்னிடம் கொடுக்க ஏதாவது இருந்தால், என்னால் கூட முடியும். பதிலுக்கு ஏதாவது கொடுங்கள்."

அப்போது, ரயில் ஒரு ஸ்டேஷனுக்கு வந்ததும், தொழிலதிபர் இறங்கி போய்விட்டார்.

யாசகன் அந்த மனிதன் சொன்னதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான். அவனுடைய வார்த்தைகள் எப்படியோ யாசகனின் இதயத்தை எட்டின.

நான் யாருக்கும் எதையும் கொடுக்க முடியாததால், பிச்சையில் எனக்கு அதிக பணம் கிடைக்காது என்று அவன் நினைக்கத் தொடங்கினான். ஆனால் நான் ஒரு யாசகன், நான் யாருக்கும் எதையும் கொடுக்கக் கூட தகுதியற்றவன். ஆனால் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் எதையும் கொடுக்காமல் மக்களிடம் கேட்டுக்கொண்டே இருப்பேன்.

ஆழ்ந்து யோசித்த யாசகன், தனக்கு பிச்சை எடுக்கும் போது ஏதாவது கிடைத்தால், அதற்கு ஈடாக ஏதாவது ஒன்றை கண்டிப்பாக கொடுப்பேன் என்று முடிவு செய்தான்.

மறுநாள் ஸ்டேஷன் அருகே அமர்ந்திருந்தபோது, ஸ்டேஷனைச் சுற்றியிருந்த செடிகளில் பூத்திருந்த சில பூக்களில் அவன் பார்வை பட்டது. பிச்சைக்கு ஈடாக சில பூக்களை மக்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று அவன் நினைத்தான்.

அவன் இந்த யோசனையை விரும்பினான் மற்றும் அங்கிருந்து சில பூக்களை பறித்துக்கொண்டு ரயிலில் பிச்சை எடுக்கச்சென்றான்.

யாராவது அவனுக்கு தானம் செய்யும் போதெல்லாம், அவன் அவர்களுக்கு சில பூக்களைக் கொடுப்பான். ஒருநாள் அதே தொழிலதிபர் ரயிலில் அமர்ந்து இருப்பதை கண்டான்.

யாசகன் உடனே அவரிடம் கை நீட்டி, "இன்று உனக்கு தானமாக கொடுக்க என்னிடம் சில பூக்கள் உள்ளன" என்றான்.

அந்த மனிதன் அவனுக்கு கொஞ்சம் பணம் கொடுத்தான், யாசகன் அவருக்கு சில பூக்களை கொடுத்தான். அந்த நபர் அவனது யோசனையை மிகவும் விரும்பினார் மற்றும் மிகவும் ஈர்க்கப்பட்டார். "அடடா! இன்று நீயும் என்னைப் போல் வியாபாரி ஆகிவிட்டாய்" என்றார்.

ஆனால் மீண்டும் ஒருமுறை, அவர் வார்த்தைகள் யாசகனின் இதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அந்த மனிதர் சொன்னதையே திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டு சந்தோசப்பட ஆரம்பித்தான்.

உடனே ரயிலில் இருந்து இறங்கி உற்சாகமாக வானத்தைப் பார்த்து, மிகவும் உரத்த குரலில், "இனி நான் யாசகன் இல்லை, நான் இப்போது தொழிலதிபர், அந்த மனிதரைப் போல நானும் பணக்காரனாக ஆகலாம்" எனச் சத்தமிட அவனைப் பார்த்து சுற்றியிருந்தவர்கள் இந்த யாசகனுக்கு பைத்தியம் பிடித்திருக்கலாம் என்று நினைத்தார்கள். மறுநாள் அந்த யாசகனை அந்த நிலையத்தில் இல்லை... காணவே இல்லை.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அதே ஸ்டேஷனில் இருந்து சூட் அணிந்த இரண்டு ஆண்கள் பயணம் செய்தனர். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டபோது, ஒருவரை ஒருவர் கைகூப்பி வணங்கி, "என்னை அடையாளம் தெரிகிறதா?"

மற்றவர், "இல்லை! ஒருவேளை நாம் முதல் முறையாகச் சந்திக்கலாம்" என்று பதிலளித்தார்.

முதலாமவர் மறுபடியும் சொன்னார், "சேர், நினைச்சுப் பாருங்க, நாம முதல் தடவையல்ல, மூன்றாவது தடவையாகச் சந்திக்கிறோம்" என்றார்.

"இதன் விளைவாக, இன்று நான் மிகப் பெரிய பூ வியாபாரி, அதே வியாபாரம் தொடர்பாக வேறு ஊருக்குச் செல்கிறேன்."

"முதல் சந்திப்பிலேயே இயற்கையின் விதியைச் சொன்னீர்கள்... அதன்படி நாம் ஒன்றைக் கொடுத்தால்தான் நமக்கு ஒன்று கிடைக்கும்.

இந்த பரிவர்த்தனை விதி உண்மையில் வேலை செய்கிறது. நான் அதை நன்றாக உணர்ந்தேன், ஆனால் நான் எப்போதும் என்னை ஒரு யாசகனாகவே நினைத்துக் கொண்டேன், அதற்கு மேல் உயர நினைத்ததில்லை.

நான் உங்களை இரண்டாவது முறை சந்தித்தபோது, நான் ஒரு தொழிலதிபராக மாறிவிட்டேன் என்று சொன்னீர்கள். உங்களுக்கு நன்றி, அன்று முதல், எனது பார்வை மாறி, இப்போது நான் ஒரு தொழிலதிபராக மாறிவிட்டேன், நான் இப்போது யாசகன் அல்ல.

யாசகன் தன்னை யாசகனாகக் கருதும் வரை, அவன் யாசகனாகவே இருந்தான், அவன் தன்னை ஒரு வணிகனாகக் கருதியபோது, அவன் ஒரு வணிகனாகவே மாறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

அம்புலிமாமா

## மூன்று வரங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

மலையன் கணவாயின் முடிவிற்கு வந்தபோது அங்கும் ஒரு உயரமான யாசகன் இருந்தான். அவனும் மலையனிடம் பேசி, மீதமிருந்த ஒரு ரூபாவையும் வாங்கிக் கொண்டு விட்டான்.

அப்போது அவன் "நீ உன்னிடம் இருந்த மூன்று ரூபாவையும் கொடுத்து விட்டாய். ஒரு ரூபாய்க்கு ஒரு வரம் வீதம் மூன்று வரங்கள் கொடுக்கின்றேன். முதலாவதைக் கேள்" என்றான்.

மலையன் சற்று யோசித்து "கண்ணன் குழல் ஊதி எல்லோரையும் ஆட வைத்தார். அதுபோல் எனக்கு ஒரு குழல் கொடுத்தால் அதை இசைத்து எல்லோரையும் ஆட வைப்பேன்" என்றான். அவனும் "சரி. அது கிடைக்கும். அடுத்து என்ன வேண்டும்?" என்று கேட்டான். மலையனும் "ஒரு பொருள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அதை சரி யாக அடிக்கக் கூடிய உண்டிகோல் வேண்டும்" என்றான்.

அவனும் "சரி அதுவும் கிடைக்கும். மூன்றாவதாக என்ன வேண்டும்?" என்று கேட்டான். மலையனும் "நான் யாரிடம் எதைக் கேட்டாலும் அவர் அதை எனக்குக் கொடுக்க வேண்டும்" என்றான். அவனும் "இதோ நீ கேட்ட புல்லாங்குழலும் உண்டிக்கோலும் நீ கேட்ட மூன்றாவது வரத்தின் படியும் நடக்கும்" என்று கூறி திடீரென மாயமாய் மறைந்து போனான். மலையன் வெயிலைத் தாங்க முடியாமல் ஒரு மரத் தடியிலே படுத்துத் தூங்கி விட்டு மாலையாகும் போது நகரை அடைந்தான்.



அங்கு ஒரு கடைக்காரனிடம் தனக்கு வேண்டிய துணிகளை கேட்க அவர் உடனேயே அவன் கேட்டவற்றை எடுத்துக் கொடுத்தான்.

இன்னொருவனைக் கேட்டு ஒரு குதிரையை வாங்கிக் கொண்டு அவன் நல்ல ஆடைகளை அணிந்து கொண்டு குதிரை மீது அமர்ந்து தன் ஊருக்குச் சென்றான். அங்கு அவன் மணியகாரரைச் சந்தித்தான். அவர் அவனைக் கண்டு ஆச்சரியப்பட்டு "அடேயப்பா! நீ பெரிய மனிதனாகி விட்டாயே!" என்று கேட்டான்.

மலையனும் ஆமாம் எனவே அவர் "அடடே கையில் புல்லாங்குழல் வேறு சங்கீதம் கற்றுக் கொண்டிருக்கிறாயா?" என்று கேட்டார். மலையனும் "ஆமாம். அது மட்டுமல்ல இந்த உண்டிக் கோலால் எதையும் என்னால் அடிக்க முடியும்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்




மதங்க முனிவனது தவப்பள்ளி, கற்பக மரம் என்று சொல்லத்தக்க வளங்களைப் பெற்று விளங்கியது. அந்த ஆசிரமத்தில் நீண்டகாலமாய்த் தவம் செய்து கொண்டிருந்த முதியவள் சவரியைச் சந்தித்து அவள் நலம் விசாரித்தனர். அவள் இவர்களை இன்முகம் காட்டி இனிய கூறி வரவேற்றாள்; சுவை மிக்க காய் கனிகளைத் தந்து விருந்து படைத்தாள். "என் தந்தை போன்ற தலைவா! உன் வருகைக்காகத்தான் காத்திருந்தேன். என் தவம் பலித்தது" என்று கூறினாள். "தாயே! வழி நடை வருத்தம் தீர, வகை வகையான உணவு தந்து உபசரித்தீர். நீர் வாழ்க!" என்றான் இராமன்.

சுக்கீரிவன் தங்கி இருக்கும் ருசிய முக பருவதத்துக்குச் செல்லும் வழிகளை நினைவுகூர்ந்து, அவற்றை அவனிடம் கூறினாள்; பின்னர் அவள் முக்தி அடைந்தாள்.

## கிட்கிந்தா காண்டம்

### கிட்கிந்தையில் இராமன்

வானத்தைப் போன்ற பரப்பும், நீல நிறமும் பம்பைப் பொய்கை பெற்றிருந்தது, அப்பொய்கையின் பூக்களும் அதில் படியும் அன்னப் பறவைகளும் சீதையின் நினைவை இராமனுக்கு மிகுதிப் படுத்தின, கயல் பிறழ்ச்சி சீதையின் கண்களை அவன் கண்முன் நிறுத்தியது; அன்னப் பறவை மின்னல் இடையாளான சீதையின் நடையைக் காட்டியது; குவளை விழித்துப் பார்த்தது; ஆம்பல் வாய் திறந்து பேசியது; களிறும், பிடியும் நீராடித் தழுவிக் கொண்டு அவர்கள் பழைய அன்பு வாழ்க்கையை நினைவுகளாகக் கொண்டு வந்து நிறுத்தின. பிடிக்கு முதலில் நீர் ஊட்டிப் பின் உண்ணும் களிற்றின் அன்புச் செயல் அவன் எதையோ இழந்து விட்டதை எடுத்துக் காட்டியது.

பிரிவுத் துயரில் அப்பொய்கைக் காட்சி அவனை ஆழ்த்தி விட்டது. நீடு நினைந்தான் நீள்கனவுகளில் மிதந்தான். காரிகை தவிர வேறு எதுவும் அவன் கண்முன் நிற்க மறுத்து விட்டது. தூரிகை கொண்டு எழுதாத அச்சித்திரம் அவனைச் சித்திரவதை செய்தது.

இலக்குவன் இராமனை நோக்கினான்; அவன் துன்பக் கனவுகளைக் கலைத்தான்; "பொழுதும் சாய்ந்தது. "நெடியோய்! நீராடி நிமலனை வழிபடு; நடந்ததை மறந்து, நடப்பதனை எண்ணிச் செயற்படுவோம்" என்று மென்மையாய்ச் சொல்லி, அவனைச் செயற்படுத்தினான், அவனும் மாலை மயக்கம் தீர்ந்து, இறை வழிபாடு செய்தான். முனிவர் தங்கியிருந்த சோலையில் ஒரு புறத்தே அவர்கள் உறைவாராயினர். மாலைக் கதிரவனும் வானத்தை இருளில் ஆழ்த்திவிட்டு மேலைக் கடலுள் ஒளிந்து கொண்டான்.

இரவு இராமனுக்குத் தனிமையைத் தந்தது; வான் உறங்கியது; வையகம் உறங்கியது; பூ ஒடுங்கின; புள் ஒடுங்கின; உயிர்கள் அனைத்தும் அயர்ந்து உறங்கின; அரவுகளும் கரவு நீங்கி அடங்கி ஒடுங்கின; விலங்குகளும் ஓய்வு கொண்டன; இராமன் மட்டும் உறங்கவில்லை; வைகல் விடிவதை எதிர்நோக்கி இருவரும் விழித்தே இருந்தனர்; விடிந்ததும் சீதையைத் தேடி மலைப் பாதைகளையும், காட்டு வழிகளையும் கடந்து சென்றனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையே இனிமையான
எதிர்காலங்களை உருவாக்குகிறது!
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அண்ணாமலை கூறிய சஞ்சீவி மலை பொருள் ஒன்றும் அறிந்திலேன்

பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை இலங்கைக்கு விஜயம் செய்து யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்துள்ளார்.

தமிழகத்தில் பாரதிய ஜனதாக் கட்சியை வலுப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ள அண்ணாமலை, பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் அன்புக்குப் பாத்திரமானவர்.

ஐ.பி.எஸ் அதிகாரியாக இருந்து, அந்தப் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு பிரதமர் நரேந்திர மோடியின் கட்சியில் இணைந்து கொண்ட அண்ணாமலையின் இலங்கை விஜயமும் யாழ்ப்பாண வருகையும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இலங்கைக்கு வருகை தந்த அவர், மலையகத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவ்வாறு அவர் உரையாற்றும்போது, சஞ்சீவி மலையை அனுமன் எவ்வாறு சுமந்தாரோ அதேபோல இலங்கையின் பொருளாதார நெருக்கடியை பிரதமர் நரேந்திர மோடி சுமப்பார் எனக் கூறியிருந்தார்.

இங்குதான் அண்ணாமலை ஆற்றிய உரை குறித்த பொருள் அறிய முடியாதிருக்கிறது.

அதாவது, மேதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அண்ணாமலை, சஞ்சீவி மலையை அனுமன் சுமந்ததுபோல இலங்கையின் பொருளாதார நெருக்கடியை பிரதமர் மோடி சுமப்பார் என்று கூறுவதற்குள்,

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை இந்தியா தீர்த்து வைக்கும்.

எனவே இலங்கை மக்கள் குழம்ப வேண்டிய தேவையில்லை என்ற பொருள் அடங்குகிறது.

இதனை இன்னும் விளக்கமாகக் கூறுவதாயின், சிங்கள மக்களே! பொருளாதார நெருக்கடியின் பொருட்டு நீங்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடுகிறீர்கள்.

ஆனால் உங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை இந்தியப் பிரதமர் தாங்கிக் கொள்வார். உங்களுக்கு உதவி செய்வார்.

ஆகவே நீங்கள் ராஜபக்ஷ தரப்புக்கு எதிராகப் போராட வேண்டியதில்லை என்பதாக பொருள் கொள்ள முடியும்.

இங்குதான் ராஜபக்ஷ தரப்பைப் பாதுகாப்பதில் இந்திய மத்திய அரசு தீவிரமாக உள்ளதென்ற ஊகங்கள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

ஆம், இந்தியாவை நம்புங்கள். உங்களை நாங்கள் பாதுகாப்போம் என்று ஒருமுறை இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ்த் தரப்புகளிடம் உறுதிமொழி வழங்கியிருந்தார்.

ஆனால் இப்போது ராஜபக்ஷ தரப்பைக் காப்பாற்றுவதில் அவர் கருசனை கொண்டுள்ளார் என்பதாக அண்ணாமலை ஆற்றிய உரையில் இருந்து அனுமானிக்கக் கூடியதாக இருக்கிறதெனில், ஈழத் தமிழர்களாகிய எங்களுக்கு மீண்டும் ஏமாற்றம்தான் முடிவா? என்ற கேள்வி எழவே செய்யும்.

# இலங்கைக்கு நிவாரண பொருட்கள் வழங்க

## தமிழக அரசுக்கு மத்திய அரசு அனுமதி

(சென்னை)

இலங்கைக்கான நிவாரணப் பொருட்களை இந்திய மத்திய அரசாங்கத்தின் மூலம் வழங்குவதற்கு தமிழக அரசாங்கத்துக்கு அனுமதி வழங்கப்படுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் டொக்டர். எஸ் ஜெய்சங்கர், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய மருந்துகளை வழங்க அனுமதி கோரி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழக சட்ட சபையில் முன்மொழிந்த தீர்மானம் எதிர்க்கட்சியான அ.தி.மு.க, பா.ஜ.க உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இலங்கைத் தமிழர்களுக்குத் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து நிவாரணப் பொருட்களை அனுப்புவதற்கு உரிய வசதியை செய்து தருமாறு கோரி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அது குறித்து, முதலமைச்சர் ஸ்டாலினுக்கு அமைச்சர் ஜெய்சங்கர் எழுதிய கடிதத்தில் தமிழகத்தின் கோரிக்கை குறித்து கொழும்பிலுள்ள அலுவலகத்திடம் ஆலோசனை நடத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான தமிழக அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு இந்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தமிழக தலைமைச் செயலாளருக்கு தமிழக அரசாங்கம் உத்தரவிட முடியும் என்று ஜெய்சங்கர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம)

## குப்பிழானில் கோழிகள் திருட்டு

(குப்பிழான்)

தற்போதைய கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் குப்பிழான் தெற்குப் பகுதியில் வீடொன்றின் கோழிக் கூட்டிற்குள் பாதுகாப்பாக விடப்பட்டிருந்த பத்துக் கோழிகள் நேற்று முன்தினமிரவு திருடிச் செல்லப்பட்டுள்ளன.

குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற பகுதி குடியிருப்புக்கள் அதிகமுள்ள பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-18)

## புதிய மின் இணைப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

### மின்சார சபை அறிவிப்பு

(கொழும்பு)

புதிய மின்சார இணைப்புகள் வழங்குவது குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

மேலும் இன்று மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படமாட்டாது என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(ம)

### ரம்புக்கனை விவகாரம்

## பொலிஸ் அதிகாரிகளின் பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு பிணை வழங்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை நீதவான் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை கேகாலை நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில், கேகாலைக்கு பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பீ. கீர்த்திரத்ன மற்றும் 3 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### தேர்தல் வெற்றிக்காக

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தகவல்கள் மறைக்கப்பட்டன

### மல்கம் ரஞ்சித் ஆண்டகை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான தகவல்களை அறிந்திருந்தும் தேர்தல் வெற்றிக்காக அவை மறைக்கப்பட்டதாக கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஆராதனையொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே கர்தினால் ஆண்டகை இதனைக் கூறினார்.

இந்த விசேட ஆராதனையில் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள், பேரவையின் ஆயர்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (ம)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## ஆன்மிக ஞானம்

❖ ஆன்மிக ஞானம் ஒன்றினால் மட்டுமே நமது துன்பங்களை என்றென்றைக்கும் ஒழிக்க முடியும். மற்ற எல்லா அறிவும் நமது தேவைகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே நீக்கும். தேவைகளை எழுப்புகின்ற மூலகாரணத்தை ஆன்ம ஞானத்தால் மட்டுமே முற்றிலுமாக வேரறுக்க முடியும்.

❖ எனவே ஒருவனுக்கு அளிக்க முடிந்த உதவிகள் அனைத்திலும் ஆன்மிக உதவியே தலை சிறந்தது. ஆன்மிக ஞானத்தைத் தருபவனே மனித குலத்திற்கு மிகச்சிறந்த நன்மை செய்பவன்.

❖ அவ்வாறு மனிதனுக்கு ஆன்மிக உதவி செய்துள்ளவர்களையே மிகுந்த ஆற்றல் வாய்ந்தவர்களாக எந்தக் காலத்திலும் நாம் காண்கிறோம்.

❖ ஏனென்றால் வாழ்வின் நமது செயற்பாடுகள் அனைத்திற்கும் உண்மையான அடிப்படை ஆன்மிகமே. ஆன்மிக வலிமையும், ஆன்மிக நிறைவும் உடைய ஒருவன். அவன் விரும்புவான் என்றால் எல்லாத் துறைகளிலும் பேராற்றல் பெற்றவனாக விளங்க முடியும்.

❖ ஆன்மிக வலிமை இல்லாமல் ஒருவனால் தன் பௌதிகத் தேவைகளைக்கூட சிறந்த முறையில் நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 56

**புத்தளம் மாவட்டம், 3,072 சதுர கிலோ மீற்றர் பரப்புக் கொண்டதாகும். இம் மாவட்டம் வடமேல் மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 38.9 வீதம் வரை பரந்து காணப்படுகின்றது. 2,882 சதுர கிலோ மீற்றர் தரைப் பிரதேசத்தையும் 190 சதுர கிலோமீற்றர் நீர்ப்பரப்புப் பிரதேசத்தையும் கொண்டுள்ளது.**

**புத்தளம் மாவட்டம் வடக்கே மன்னார் மாவட்டத்தையும், தெற்கே கம்பஹா மாவட்டத்தையும், கிழக்கே அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களையும் மேற்கே கடலையும் எல்லையாகக் கொண்டமைந்துள்ளது.**

சனத்தொகை மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பின்படி (2012) சனத்தொகை 762,396 ஆகுமென்பதோடு, சன அடர்த்தி சதுர கிலோ மீற்றருக்கு 265 நபர்களாக மாவட்டத்தினுள் காணப்பட்டது. 10 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு 95.8% ஆகும்.

கொழும்பிலிருந்து 120 கிலோமீற்றர் நேரடித் தூரத்தில் அமையப் பெற்றுள்ள புத்தளம் நகரம், இம் மாவட்டத்தின் தலைநகராகும். 2016 ஆம் ஆண்டு மாவட்டத்தினுள் 1525 கிலோமீற்றர் நீளத்திற்கு வீதிகள் அமைந்துள்ளன.

ஒல்லாந்தர் காலப்பகுதியில் கொழும்பு மற்றும் புத்தளம் நகர்களுக்கிடையில் பண்டங்களைக் பரிமாறிக்கொள்வதற்காக (போக்குவரத்துக்காக) "பாரு எல" படகுக் கால்வாய் மாவட்டத்திற்கூடாக நிர்மாணிக்கப்பட்டது.

மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (47%) அதைத்தொடர்ந்து கைத்தொழிற்றுறையில் (28%) மற்றும் விவசாயத் துறையில் (25%) ஆகும்.

### புத்தளம் மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

சனத்தொகை இனப்பிரிவு மற்றும் சமயங்களுக்கமைய வேறுபட்டுள்ள விதம் அட்டவணை (P3) இல் காட்டப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, மாவட்டத்தின் பெரும்பான்மை மக்கள் சிங்களவர்கள் ஆவர். அது மொத்த மாவட்ட சனத்தொகையில் 73.6 வீதமாகும். அதற்கு அடுத்து இலங்கை முஸ்லிம்கள் 19.3% ஆகும். சமய அடிப்டையில் பௌத்தர்கள் 43.3%, உரோமன் கத்தோலிக்கர் 31.5% மற்றும் இஸ்லாம் சமயத்தவர்கள் 19.7 % ஆகும்.

**புத்தளம் மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012**

| பிரதேச செயலகம் | தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|
| கல்பிட்டி | 11573 | 46374 |
| வண்ணாத்திவில்லு | 1364 | 6244 |
| கருவலகஸ்வெவ | 129 | 10 |
| நவகத்தேகம | 94 | 1 |
| புத்தளம் | 7499 | 52211 |
| முந்தல் | 12485 | 23468 |
| மஹகும்புக்கடவல | 512 | 12 |
| ஆணமடுவ | 297 | 654 |
| பள்ளம | 437 | 3950 |
| ஆரச்சிகட்டுவ | 2001 | 160 |
| சிலாபம் | 5870 | 4890 |
| மாதம்பே | 1172 | 2729 |
| மஹவெவ | 1139 | 23 |
| நாத்தாண்டி | 1868 | 6374 |
| வென்னப்புவ | 2026 | 90 |
| தங்கொட்டுவ | 1828 | 356 |
| மொத்தம் | 50294 | 147546 |

### புத்தளம் மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், வடமேல் மாகாண சபையில் உள்ள புத்தளம் மாவட்டத்திற்கு 16 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி புத்தளம் மாவட்டம் 8 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், வடமேல் மாகாண சபையில் உள்ள புத்தளம் மாவட்டத்திற்கு 16 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப் பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி புத்தளம் மாவட்டம் 8 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

புத்தளம் மாவட்டத்தில் 16 பிரதேச செயலகப் பிரிவுகள் உட்பட்ட 548 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 762,396 பேரிலிருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 95,300 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**புத்தளம் மாவட்டத்தில் 16 பிரதேச செயலகப் பிரிவுகள் உட்பட்ட 548 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 762,396 பேரிலிருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 95,300 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

புத்தளம் மாவட்ட செயலகத்தில் 20.11.2017 மாலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 12 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் படிகேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 23 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 35 சமர்ப்பிப்புகளில் 38பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

முஸ்லிம் சமூகத்திடம் இருந்து கிடைக்கப் பெற்ற பெரும்பாலான. சமர்ப்பிப்புகள் ஒரே மாதிரியாக இருந்தன. அதாவது கல்பிட்டி பகுதிக்கு ஒரு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதி உள்ளடங்குமாறு 7 தேர்தல் தொகுதிகளை பெயர் குறிப்பிட்டு எல்லை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தன.

**முஸ்லிம் சமூகத்திடம் இருந்து கிடைக்கப் பெற்ற பெரும்பாலான சமர்ப்பிப்புகள் ஒரே மாதிரியாக இருந்தன. அதாவது கல்பிட்டி பகுதிக்கு ஒரு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதி உள்ளடங்குமாறு 7 தேர்தல் தொகுதிகளை பெயர் குறிப்பிட்டு எல்லை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தன. அதே நேரத்தில் இன்னொரு குழுவின் சமர்ப்பிப்பு கல்பிட்டி பகுதிக்கு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதி உருவாக்குவதற்கு எதிராக இருந்ததையும் அவதானித்தது.**

அதே நேரத்தில் குழு இன்னொரு சமர்ப்பிப்பு கல்பிட்டி பகுதிக்கு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதி உருவாக்குவதற்கு எதிராக இருந்ததையும் அவதானித்தது. மேலும் குழு அவதானித்ததாவது முழு மாவட்ட சனத்தொகையில் முஸ்லிம்கள் 19.7% ஆக உள்ளடங்கி இருந்தனர். மேலும் முக்கியமாக இரண்டு பிரதேச செயலக பிரிவுகளில் செறிவாக இருப்பதுமேயாகும்.

இது பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளை உருவாக்காமல் அந்த சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் தொகுதிகள் உருவாக்க முடியும் என்பதையும் குழு அவதானித்தது. மேலும் பல் உறுப்பினர் தேர்தல் தொகுதியில் பல்வேறு சமூகங்களின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் வாய்ப்பினையும் அப்பரிந்துரைகள் மூலம் அறியமுடியவில்லை.

**அட்டவணை (P3): இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு - புத்தளம் மாவட்டம்**

| இனப்பிரிவு | எண்ணிக்கை | % | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 560,838 | 73.6 | பௌத்தம் | 329,705 | 43.3 |
| இலங்கைத் தமிழர் | 48,341 | 6.3 | இந்து | 28,811 | 3.8 |
| இந்தியத் தமிழர் | 1,953 | 0.3 | இஸ்லாம் | 150,404 | 19.7 |
| இலங்கை முஸ்லிம் | 147,546 | 19.3 | ரோமன் கத்தோலிக்கம் | 240,221 | 31.5 |
| வேறு | 3,718 | 0.5 | ஏனைய கிருஸ்தவம் | 12,093 | 1.6 |
| | | | வேறு | 1,162 | 0.1 |
| மொத்தம் | 762,396 | | மொத்தம் | 762,396 | |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரீத...

வில் மத்தி சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 21 வயதான கஜீபன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார். இளைஞனது சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## பாடசாலை...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பூநகரிப் பகுதியைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவு பாடசாலை ஒன்றின் அதிபரான 48 வயதான து. அருந்தவசீலன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

உயிரிழந்த அதிபரது சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## அண்ணா...

விருந்தினர் விடுதி ஒன்றில் இந்த சந்திப்பு இடம் பெற்றது.

இரண்டு மணி நேரம் வரை இடம் பெற்ற இந்த சந்திப்பின் போது தமிழ் தேசியு கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கல நாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், சீ.வீ.கே.சிவஞானம், த.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்புக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை இது சம்பிரதாயபூர்வமான சந்திப்பு என தெரிவித்தார். (ம-33,104)


மெகா பவர்
திகதி 02/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1098
வெற்றி எழுத்து V சுப்பர் இலக்கம் 11 வெற்றி இலக்கங்கள் 07 22 28 60

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.05.02
சீட்டிழுப்பு இலக்கம் 059
வெற்றி இலக்கங்கள் இடபம் 02 15 29 51 இடபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/05/02
சீட்டிழுப்பு இலக்கம் 4750
ஆங்கில எழுத்து Z வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 2 9 9 6 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.05.02
சீட்டிழுப்பு இலக்கம் - 780
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 16 39 55 66
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416


## 13 ஆவது...

கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு அண்டை நாடான இந்தியா இலங்கைக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்குகின்றது. எரிபொருள் மருந்து மற்றும் பண உதவி போன்ற பல்வேறுபட்ட உதவிகளை இந்த அரசாங்கத்திற்கு இந்திய அரசு வழங்கி வருகின்றது.

அதேபோலத்தான் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு நமது இந்திய நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரால் அண்மைய இலங்கை விஜயத்தின்போது இலங்கை ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அது விரைவில் நடைமுறைத்தப்படும் சாத்தியம் உள்ளது.

அதே போல இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நிலையானது விரைவில் சுமுகமான நிலையை எட்ட இறைவன் அருள் புரிய வேண்டும் அதேபோல் தற்போது உள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா வருவோருக்கு கடுமையான சட்டங்களை பிரயோகிக்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளோம்.

இலங்கை மக்களை தொப்புள் கொடி உறவுகளாக மிகவும் அன்பாகவும் ஆதரவாகவும் நேசக்கரம் நீட்டி பார்க்கின்றோம்.

தென் இந்திய மீனவர்களால் வடபகுதி மீனவர்கள் பாதிப்பினை எதிர்நோக்குகிறார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

அது உண்மைதான். அது கட்டாயமாக தீர்க்கப்பட வேண்டிய விடயம்தான். ஆனால் சிறையில் இருப்பதற்காக எந்த இந்திய மீனவனும் இலங்கை கடற்பரப்புக்குள் வருவதில்லை ஏதோ ஒரு தவறால் வருகின்றார்கள். அது தொடர்பில் உரிய கவனம் எடுப்பதாகவும் தெரிவித்தார். (ம-33,104)

## பெற்றோல்...

என்ற மாணவியே இதன்போது உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பெற்றோலை வாங்கி சேமித்து வைக்கும் நோக்கில் வீட்டு சுவாமி அறையில் பெற்றோல் நிரப்பப்பட்ட கலன் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று மாலை வழக்கம் போல் சுதர்சிகா வீட்டு சுவாமி அறையில் விளக்கேற்றிவிட்டு தீக்குச்சியை கீழே போட்டுள்ளார்.

இதன்போது சுவாமி தட்டுக்கு கீழாக வைக்கப்பட்டிருந்த பெற்றோல் கலனில் கீழே விழுந்த தீக்குச்சி பட்டதும் தீப்பற்றி எரிந்ததாலேயே இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. (ம-33,107)

## அரிசிக்கு...

பட்டுள்ளது.

கீரிச் சம்பா கிலோ ஒன்றின் விலை 260 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இனிமேல்...

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக 3 பௌத்த பீடாதிபதிகளினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு இதுவரை பொறுப்பானவர்கள் பதிலளிக்காத காரணத்தினால் மகாநாயக்க தேரர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்ற, இடைக்கால அரசாங்கம் அமைப்பது உள்ளிட்ட 6 யோசனைகள் அடங்கிய கடிதத்தை மகாநாயக்க தேரர்கள் அண்மையில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு சமர்ப்பித்திருந்தனர்.

இந்நிலையில், குறித்த ஆவணத்திற்கு இதுவரை எவரும் சாதகமாக பதிலளிக்காத காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சியம் நிகாயாவின் மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார். (ம)

## நாடு...

அரச, தனியார் மற்றும் தோட்டத் துறையைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதன்படி, அன்றைய தினம் நாடு முழுவதும் உள்ள அனைத்து நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் உள்ள மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தலைவர்கள்...

வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சுபீட்சமான நாட்டை உருவாக்கப் போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த மொட்டுக் கட்சி நாட்டை நாசம் செய்துள்ளது.

தற்போது அரசாங்கத்தின் தலைவர்களுக்கு வெளியில் செல்ல முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. பங்கர்களில் அரசாங்கத்தின் தலைவர்கள் பதுங்கியுள்ளனர் எனவும் தெரிவித்தார். (ம)

## தேசிய...

மேலும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடலில் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் கலந்துகொண்டதாக சாகர காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச உள்ளிட்ட உறுப்பினர்களும் இந்த விடயம் தொடர்பில் பொது நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் இணக்கம் தெரிவித்துள்ளார். (ம)

## உறவுகளைத் தேடிய மேலும் ஒரு தாய் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகன், மருமகன், பேரன் ஆகிய மூவரை தேடி வந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் இரவு மரணமடைந்துள்ளார்.

வவுனியா கிருஷ்ணகுளம் (கிறிஸ்தவகுளம்) பகுதியைச் சேர்ந்த செல்லையா செல்வராணி (வயது 75) என்ற தாயே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது மகன் தங்கராசா தயாபரன் (வயது 41), மருமகன் தம்பு தியாகராசா (வயது 56), பேரன் தியாகராசா மனோகரன் (வயது 31) ஆகிய மூவரும் கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளத்தில் விறகுவெட்ட சென்றபோது காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். அவரைத்தேடி வவுனியாவில் கடந்த 1898 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சி முறை உணவுத் தவிர்ப்பு போராட்டத்திலும் குறித்த தாய் கலந்து கொண்டு தனது மகன், மருமகன், பேரன் ஆகிய மூவரையும் கண்டுபிடித்து தர போராடியிருந்தார். இந்நிலையில் மூவரையும் காணாமலேயே அவர் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-299)


அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1553
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.05.02
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,689,800/-
வெற்றி இலக்கங்கள் 18 29 42 46 ஆங்கில எழுத்து S
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.05.02
சீட்டிழுப்பு இல: 3888
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,963,020/-
வெற்றி இலக்கங்கள் 03 05 30 72 ஆங்கில எழுத்து E
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1727 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022 / 05 / 02 தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் R 01 36 76 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 59,475,540/-
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,051,352/-
திகதி 2022 / 05 / 02
வெற்றி வாரம் 3439
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 19 25 28 62 மகரம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,742,460/-

12
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 40 16 22 23 63
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 234,603,697/-
சீட்டிழுப்பு வாரம் 903
வர்ணம் இள நீலம்
திகதி 2022.05.02 திங்கட்கிழமை
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது நான் அதை ஏற்க மறுத்துவிட்டேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

இடைக்கால அரசாங்கத்தில் பங்குகொள்ளும்படி யாரேனும் என்னை கட்டாயப்படுத்த முயற்சித்தால், அவர்களின் பெயர்களை வெளிப்படுத்திவிட்டு வீட்டுக்குச் செல்வேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ கூறினார்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், "நாங்கள் இடைக்கால அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவும் பொது நிதியை கொள்ளையடித்தவர்களுடன் தொடர்புகொள்ளவும் விரும்பவில்லை. மக்கள் ஆணையுடன் ஆட்சி அமைக்க மட்டுமே நாங்கள் விரும்புகிறோம்.

எனக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது. நான் அதை ஏற்க மறுத்துவிட்டேன். அரசியலமைப்பு நெருக்கடியின்போது இது நடந்தது. ஆனால் நான் மறுத்துவிட்டேன்.

மாற்று அரசாங்கம் அமைக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மாற்றப்படுவார் என்றும் சிலர் கூறுகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழப்பதில் எனக்கு கவலையில்லை. யார் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்களை விநியோகிக்கும் 'ஹஸ்மா' போன்ற திட்டங்களை நடைமுறைப் படுத்திய ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் திட்டங்களைத் தொடங்குவதில் சிரமம் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் உலகத்துடனான இராஜதந்திர உறவுகளை புதுப்பித்து அதற்கான உதவியைப் பெறும்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# பெரமுனவிலிருந்து புதிய பிரதமர் இல்லை

## பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு பல்வேறு மட்டங்களில் அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில் புதிய பிரதமர் தொடர்பில் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கருத்து தெரிவித்துள்ளார்.

பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களின் அறிவுறுத்தலின்படி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகினாலும் புதிய அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தரப்பில் இருந்து பிரதமர் ஒருவர் நியமிக்கப்படமாட்டார் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணும் நோக்கில் அனைத்து கட்சி இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க 11 சுயாதீன கட்சிகளின் அணி முன்வைத்த யோசனைக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# காலிமுகத்திடல் சென்றால் அயோக்கியனும் வீரனாகலாம்

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



(கொழும்பு)

எந்த ஒரு அயோக்கியனும் காலிமுகத்திடலுக்கு சென்றால் அவர் வீரன். இவ்வாறு நெருக்கடியில் வீரனாகுபவர் வீரன் அல்ல. அந்த நெருக்கடியை தீர்ப்பதே வீரருடைய செயல் என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்களை அசிங்கப்படுத்தும் வகையில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ கருத்து வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

தற்போதைய நிலையில் யாரும் பிரபல்யம் அடைய விரும்பினால் கோட்டா கோ கம சென்றால் சாத்தியமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இன்று வீதியில் இருப்பவர்களில் அதிகமானோர் மத்திய வர்க்கத்தினர்தான். இன்று அவர்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல், சவால் ஏற்பட்டுள்ளது. நெருக்கடிக்கு மத்தியில் ஆர்ப்பாட்டங்களில் வீரனாகுவது பெரிய விடயமல்ல.

எந்த ஒரு கோமாளியும் காலி முகத்திடலுக்கு சென்றால் ஹீரோ வாகுவது பெரிய விடயமல்ல. நான் அண்மையில் பார்த்தேன் பொலிஸ் அதிகாரி ஒருவர் தேசிய கொடியுடன் சீருடையில் சென்று வீரக் கதைகள் பேசிக் கொண்டிருந்தார்.

பின்னர் அவர் யார் என தேடி பார்த்தால் 5 கிலோ கிராம் கஞ்சாவுடன் சிக்கிய குற்றச் சாட்டு சுமத்தப்பட்ட ஒருவர். ஒழுக்காற்று விசாரணைகளுக்குள்ளானவர். அவர் அங்கு சென்றதால் வீரனாகிவிட்டார். இவரைப்போன்று இன்னும் சிலரும் உள்ளனர். பெயர்களை குறிப்பிட்டால் அவர்கள் மனமுடைய வாய்ப்புகள் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ம)


## பருத்தித்துறையில் வேலைவாய்ப்பு

பருத்தித்துறையில் இயங்கிவரும் திருமண மண்டபத்துடன் இணைந்த ரெஸ்ரூரன்ருக்கு சமையல் கலைஞர்கள் (Chef), உணவு பரிமாறுபவர்கள், சமையல் உதவியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் கைதொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

0777046623 / 077 315 1654

நிர்வாகம் : Sundigitel (Pvt)Ltd. Point - Pedro. (C-4276)

## வேலையாள் தேவை

ஏற்கனவே பெண்பிள்ளைகள் வேலை செய்கின்ற மா, தூள் அரைக்கும் மில்லிற்கு ஆண், பெண் இருபாலாரும் பழகி வேலை செய்யக்கூடியவர் தேவை.

சம்பளம் : 1,500/= இற்கு மேல் (11245)

077 936 1356

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளான் ஒட்டகப்புலத்தில் 30 பரப்புக் காணி 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- அச்சுவேலி - தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பிரதான (காபற்) வீதியில் இருந்து 50m தூரத்தில்.
- ஒட்டகப்புலம் றோ.க.த.கலவன் பாடசாலைக்கு அருகாமையில்.
- 14 அடிப்பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 2km தூரம்.

ஒரு பரப்பின் விலை: ஐந்து இலட்சம் (11246)

☎-077 911 6983

## IMMEDIATE VACANCY

### Administrative Assistant



Duties
- Assisting Visa Applications
- Air Ticketing
- Office Administration

Requirements
- ✓ Fluent in English
- ✓ Relevant Experience

Salary-40'000/= (C-4270)

CIMS COLLEGE 0777068777

49A, Chappel lane, Jaffna ( near Jaffna Central college)

## காணி விற்பனைக்கு

பெரியகமம் எழுத்தூர் மன்னாரில் றோட்டுக்கு அருகில் காய்க்கும் தென்னை மரங்களுடன் மூன்று பக்க மதில் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. (11252)

தொடர்புகளுக்கு

077 864 7589

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி ஆனந்தபுரம் பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 14 அடி பாதையுடன்
- நல்ல தண்ணீர்ஊற்று சூழல்
- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 2km தூரம்
- நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து
- 3km தூரம்

பார்வையிடும் நேரம் :

காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

1 பரப்பின் விலை 750,000/=

தரகர் தேவையில்லை (11256)

ஜெயம்

077 814 7389, 077 241 7589

## ஈஸ்வரி

### ராஜ யோக நிலையம்



*அரியதோர் சந்தர்ப்பம்!*

இன்று மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் நடைபெறும் 3ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது புதிதாக இணைந்து 01.12.2022இற்குள் 100 மணிநேர வகுப்பை (Diploma) பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அடுத்த 100 மணி நேர ஆசிரிய பயிற்சி (Teacher Training) இலவசம்.

பாலாவோடை, மானிப்பாய்.

077 557 7517 (11255)

அஷ்டாங்கயோகி

## கடை தேவை

வியாபார நடவடிக்கைக்கு ஏற்ற கடை (10x10) அல்லது காணி உடன் தேவை. உரும்பிராய், கோண்டாவில், மானிப்பாய், சுன்னாகம், கொக்குவில், மல்லாகம் போன்ற இடங்கள் விரும்பத்தக்கது. (11249)

தொடர்புகளுக்கு

077 086 9918

## சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (11269)

தொடர்புகளுக்கு

076 239 9874


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.